(அ) திருவொற்றியூர், எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில் இருக்கும் பல்வேறு பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் அனைத்தும் கடலில் கலந்து அங்குள்ள மீனவர்களுக்குப் பெரும் தீங்கு விளைவிப்பதால், அவற்றைக் களைய அரசு முற்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர், எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில் பல்வேறு பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து மீண்டும் தொழிற்சாலை உபயோகத்திற்கும் மரம் வளர்ப்பதற்கும் பயன்படுத்திக்கொள்கின்றனர். எஞ்சிய கழிவுநீர் கடலில் கலப்பதற்கு முன்னர், அதன் தரத்தை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வு செய்கிறது. கடலில் விடப்படும் கழிவுநீரின் தரம் மற்றும் வெப்பநிலை ஆகியன வாரியம் நிர்ணயித்த தர அளவுக்கு உட்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 13, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

13—

சிப்காட் தொழிற்சாலைகள்

***39808–திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் சிப்காட் மூலம் தொழிற்சாலைகள் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2004 ஜூலை 26]

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியானது காவிரி டெல்டாவின் கடைமடைப் பகுதியாகும். இங்கு எந்தவிதமான தொழிற்பேட்டையும் இதுவரையில் தொடங்கப்படவில்லை. இப்பகுதியிலுள்ள மக்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். தற்சமயம் வானம் பொய்த்துவிட்டதாலும், கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் தர மறுத்துவிட்டதாலும், இப்பகுதியிலுள்ள விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் எந்தவொரு பணியும் இல்லாமல் வறுமையில் வாடுகின்றனர். இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில், கடற்கரையோரமாக உள்ள பகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டைகள் தொடங்க முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் புதியதாகத் தொழில் வளாகம் ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. சீர்காழி தொகுதிக்கும் கடலூருக்கும் 45 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஆகவே, 45 கிலோ மீட்டர் தூரத்தில் இன்னொரு சிப்காட் தொழில் வளாகத்தை உருவாக்குவது என்பது சற்று இயலாத காரியமாக இருக்கின்ற காரணத்தினால், சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு வேண்டிய கடன் உதவி மற்றும் தேவையான வசதிகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் அதற்கான வழிமுறை மற்றும் தகுந்த திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்து அதன் மூலம் தொழில் உற்பத்தியை சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. ஏ.கே. செல்வராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

14—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***22903–திரு. ஏ.கே. செல்வராஜ்:**

மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை ஒன்றியம், கெம்மாரம்பாளையம் கிராமத்தில் புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வாண்டு வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10–45

திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெம்மாரம்பாளையம் கிராமம் ஒரு மிகப் பெரிய கிராமம். 2435.5 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்ட கிராமம். இந்தக் கிராமத்திலே நிறைய ஆதிவாசி மக்கள் வசித்து வருகிறார்கள். தற்சமயம் இந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் அனைவருமே காளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேதான் வரவு–செலவுக் கணக்குகளையெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த காளம்பாளையம் கிராமத்திலேயிருக்கிற அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே அதிகமான அளவிலே டெபாசிட்களைச் செய்கிற மக்கள் இந்த கெம்மாரம்பாளையம் கிராமத்திலே இருக்கிறார்கள். ஆகவே,